**கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2021**

**…………………………………………………………………………………………..…**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**……………………**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**……………………………………………**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**……………………………………………………………………**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

**…………………………………………………………………………………………………………………**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

.....................................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்ானிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் விளைதிறனான ஆயுட் காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 696,175 கிரயமான தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்கள். கணனிகள் ஆகிய சொத்துக்களின் விளைதிறனான ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறுகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவு | தளபாடங்களும் பொருத்திகளும், துணைக்கருவிகள். அலுவலக உபகரணங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டிருந்தும் பெறுமதியை கணித்து விளைதிறனான ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. அகற்றப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட கணனி போன்ற உபகரணங்கள் நாளதுவரையாக்க முடியாத நிலையிலும் முழுமையான செயற்திறனுடன் பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்படுவதனால் எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்த சொத்துக்களை மீள் மதிப்புச் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 4,644,164,591 ஆகும். இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பிற்காக காப்பீட்டு மதிப்பீடானது காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் ஓய்வூதியப் பொறுப்பு காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2007 ஆம் ஆண்டில் காப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் பொறுப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் சபையின் சமூக பாதுகாப்புத் திட்டத்ததை மீள்கட்டமைப்பு செய்ததன் பின்னர் காப்பீட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதிய பொறுப்பினை காப்பீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் காலரீதியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பும் போது காசு அல்லது காசுக்குச் சமனானவைகளை ஈடுபடுத்தும் போது தேவைப்பாடு இல்லாத முதலீடுகள் மற்றும் நிதி கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றிலிருந்து நீக்கப்பட வேண்டிய போதிலும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களுக்கான மரணபனிக்கொடை நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,752,840 பங்களிப்பானது பிழையாக முதலீட்டு காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கடற்றொழிலாளர்களின் மரணப் பணிக்கொடை நிதியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவானது பணமாகச் செலுத்தப்படாததனால் ஒதுக்கீடு செய்தலினை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டுவதற்கு 2022 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | பணம் அல்லது பணத்திற்குச் சமனானவைகளை ஈடுபடுத்தும் தேவைப்பாடு இல்லாத முதலீடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடற்றொழிலாளர் ஓய்வூதியப் பிரிவில் எதுவித நேரடி கடமையும் நிறைவேற்றாத மூன்று உத்தியோகத்தர்களின் மீளாய்வாண்டிற்கான முழுச் சம்பளமாகிய ரூபா 1,979,712 மொத்த தொகை திட்டத்தின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதானது இத்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக இருந்ததுடன் தற்பொழுது ஏனைய கடமைகளை நிறைவேற்றுகின்றார்கள். திட்டத்திற்குரிய கடமைகள் சுழற்சி முறையில் ஏனைய உத்தியோகத்தர்களாலும் நிறைவேற்றப்படுவதனால் இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவு ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் திட்டத்திற்குரிய ஊழியர்களின் சம்பளம் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | திட்டம் தொடர்பான செலவுகள் மாத்திரம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிலுள்ள மாவட்ட கடற்றொழில் செயற்திட்ட உத்தியோகத்தர்களால் ஓய்வூதியப் பங்களிப்பு பணத்தை அறவிடும் போது ஒரு தவணைப்பணத்திலிருந்து ரூபா 11 வீதம் அறவிடப்படுகின்ற தரகுப்பணம் இத்திட்டத்தின் ஒரு செலவாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அத்தரகுப் பணமானது கடற்றொழில் ஓய்வூதிய பங்களிப்பு பணத்திலிருந்து கழித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களின் மூலம் அனுப்பப்படுகின்ற பணம் தவணைப் பணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தரகுப் பணத்தையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையான வருமானமும் செலவும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

**..................................................................................................................................**

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி** | **துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி** | **வித்தியாசம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|---|
| .......... | ............ ரூபா ............. | .............. ரூபா ...... | ............ ரூபா ........... | ....................... | ............... |
| 121 கடற்றொழில் காப்புறுதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்பு பணம் | 146,707 | 117,648 | 29,059 | சபைக்கு கிடைத்த அனைத்து காசோலைகளும் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் திட்டமிடப்படாத பெறுவனவுகள் விரைவாக கணக்கிணக்கம் செய்யப்படும். | ஒப்பீட்டினை மேற்கொண்டு வித்தியாசத்தை இனங்காணல் வேண்டும். |

**1.5.4 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

**.........................................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ……….................................. | ……………….......…… | …………….. |
| திட்டத்தின் ஓய்வூதிய பொறுப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,644,164,591 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 9 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே திரண்ட நிதியத்தின் தேறிய சொத்துக்கள் நிலைமை ரூபா 4,103.708,674 மறைப் பெறுமதி வரை அதாவது முன்னைய ஆண்டினை விட 12 சதவீதம் அதிகரித்திருந்ததனால் அதுவும் திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்கு தாக்கமளித்திருந்தது. | இத்திட்டமானது சுய நிதியை அடிப்படையாகக் கொண்டு அமுல்ப்படுத்தப்படாததனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பொறுப்பு அதிகரித்துச் செல்வதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடையும். அக்காரணத்தினால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. | திட்டத்தை செயற்பாடுள்ளதாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம், விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களில் அத்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக ரூபா 518,000,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அதில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டிப் பணம் ரூபா 248,129,566 மொத்த தொகை இன்னும் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது. | ஓய்வூதிய திட்டத்திற்குள் உருவாகியுள்ள நிதிச் சிக்கல் தொடர்பாக பொதுத் திறைசேறியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டவாறு மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் இப்பணம் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இன்றுவரை ரூபா 248.1 மில்லியன் பணம் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்து அறவிட வேண்டியுள்ளதுடன் கடன் பணமும் அவை மீதான வட்டியும் மேற்கூறிய மீதியில் அடங்கியுள்ளது. இப்பணத்தை படிப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு, நலன் திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (i) 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | நிர்ணயிக்கப்பட்ட தகமைகளைப் பெற்றிருந்தும் 18 வயதுக்கு குறையாத 59 வயதுக்கு அதிகரிக்காத கடற்றொழிலாளர்களுக்கு தமது | எதிர்காலத்தில் நிதி ரீதியாக சாத்திய வளத்துடனான கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தை | திட்டத்தை செயற்பாடுள்ளதாக் குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாது நிரந்தர அரைகுறை இயலாமைக்கு அல்லது முழுமையான இயலாமைக்கு உள்ளாகுகையில் பொருளாதார ரீதியாக ஏதும் பின்னடைவு ஏற்படுவதற்கு படிகள் செலுத்துதல், மரணத்தின் போது மரணப் பணிக்கொடை செலுத்துதல், 60 வயதினைப் பூர்த்திசெய்தலினை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு எந்த அங்கத்தவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. | அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதனால் அத்திட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளும் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ii) | 7 ஆம் பிரிவு | ஒரு பங்பகளிப்பாளர் 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து ஓய்வூதியத்திற்காக தகமை பெறுகின்ற போதிலும் திட்டத்தினால் ஓய்வூதியத்தை தயாரித்த திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் நிலுவையான ஓய்வூதியப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் 2009 சனவரியிலிருந்து 2021 திசெம்பர் வரையான காலம் தொடர்பாக ஓய்வூதியத்தினை வேண்டிக் கொண்ட 178 கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலுவையான ஓய்வூதியம் ரூபா 4,863,160 தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடற்றொழிலாளர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு நீண்ட காலம் தாமதித்துள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிலுவை ஓய்வூதியத்தினை செலுத்தும் போது தாமதமடைந்தமைக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யும் போது பழைய நிலுவை ஓய்வூதியத்தினை செலுத்தலினை தற்காலிகமாக நிறுத்தியதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அவ்வாறு தாமதமடைந்தமைக்கான காரணத்தை கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர்களை உள்ளடக்கிய மாவட்டத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய பணத்தை | ஓய்வூதியத்திற்காக தகமை பெறுகின்ற திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 16 ஆம் பிரிவு | பங்களிப்பாளர் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் பிரதிபலன்களை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் அந்த அறிவித்தலை செய்யாததன் காரணமாக 60 வயதினைப் பூரணப்படுத்தி ஓய்வூதியம் பெறுவதற்கு தகமையுள்ளது எனக் கருதி 2020 ஆம் ஆண்டின் போது 58 நபர்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது 42 நபர்கள் விண்ணபங்களைச் சமர்ப்பித்திருந்தும் தவணைப்பணங்களை முறைப்படி செலுத்தாமையின் அடிப்படையில் நலன்களை இழந்துள்ளனர். | பங்களிப்பாளர் பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ள நபரா என்பது பற்றி ஆராய்ந்து பார்த்து தவணைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக தேவையான ஆலோசனைகள் தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் சில சந்தர்ப்பத்தில் அவ்வாறு பங்களிப்பு இரத்துச் செய்யப்பட்ட ஒரு பங்கபளிப்பாளர் மேலும் பங்களிப்பு பணத்தை செலுத்துவாராக இருந்தால் அவருக்கு 60 வயது பூர்த்தியாகும் போது உரிய தேறிய தவணைப் பணமும் வட்டியும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புபட்ட தகுதிவாய்ந்த அதிகாரியான கடற்றொழில் திணைக்களத்திற்கு கணக்காய்வு ஐய வினாவில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீண்டும் இடம்பெறாமைக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு தெரியப்படுத்தப்படும். | தொடர்ச்சியாக பத்து தவணைகளுக்குப் தவணைப் பணத்தை செலுத்தாததன் அடிப்படையில் நலன்களை இழந்துள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (iv) | 20 ஆவது பிரிவு | அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக | இத்திட்டத்தினை மீளமைப்புச் செய்து சுய நிதியின் அடிப்படையில் பேணக்கூடிய ஒரு ஓய்வூதியத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனைக் குழு கூட்டப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலோசனைக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்றுவரை குழு கூடியிருக்கவில்லை. | கடற்றொழில் அமைச்சுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று வரை கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டம் ஆட்களை சேர்த்துக் கொள்வதனை மீண்டும் ஆரம்பிப்பதற்காக அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க கடற்றொழில் அமைச்சின் மூலம் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற தீர்வுக்கு இணங்க விரைவாக ஆலோசனைக் குழுவினைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 1992 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாண கோவை | | | |
| | நி.பி 177(1) | சேகரிக்கப்படுகின்ற அரசாங்க பணம் நாளாந்தம் அல்லது முடியுமான அளவு விரைவாக அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் கடற்றொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பங்களிப்பு பணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் போது அம்பாறை கடற்றொழில் மாவட்ட அலுவலகத்தினால் 2 நாட்களிலிருந்து 88 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | சேகரிக்கப்படுகின்ற தவணைப்பணத்தை துரிதமாக அனுப்பிவைக்குமாறு அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது டன் இக்கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை அவர்களுக்குத் தெரிவித்து பணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடற்றொழிலாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற பணத்தை நாளாந்தம் அல்லது முடியுமான அளவு விரைவாக வங்கியில் வைப்புச் செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

........................

### 2.1 நிதி விளைவுகள்

......................

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 427,806,224 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 386,869,108 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 40,937,116 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஓய்வூதியக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய

ஓய்வூதியத்திற்காக மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் கடந்த ஆண்டினை விட ரூபா 36.824,910 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**......................................**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**.................................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ………................................... | ……………….........……. | …………….. |
| 2021 ஆம் ஆண்டிற்காக திட்டத்திற்கான மொத்த பங்களிப்பு பெறுவனவு ரூபா 146,707 மற்றும் முதலீட்டு வட்டி ரூபா 15,623,234 ஆக இருந்த போதிலும் மொத்த ஓய்வூதிய கொடுப்பனவுகள் ரூபா 75,337,898 தொகையும் தேறிய தவணைப் பண கொடுப்பனவுகளும் வட்டியும் ரூபா 715,202 தொகையும் மற்றும் மரண பலவீன நலன் கொடுப்பனவு ரூபா 288,000 தொகையுமாக இருந்ததனால் கிடைத்த பங்களிப்பின மிகைத்து திட்டத்தின் பிரதிபலன் கொடுப்பனவுகள் ரூபா 60,571,159 ஆகும். தொடர்ச்சியாக இந்த திருப்தியற்ற நிலை அவதானிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் தொடர்புபட்ட பெறுமதி ரூபா 68,710,450 ஆகும். திட்டத்தினால் திருப்தியான நிதி நிலைமையினை உருவாக்குவதற்காக எதுவித திட்டமும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்தின் பிரதிபலன்கள் பங்களிப்பாளர்களின் தவணைப்பணங்களை அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அதிகரித்ததனால் இத்திட்டத்தை சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டு அமுல்ப்படுத்துவதற்கு முடியாத நிலைமை உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிதித் தேவைப்பாட்டினை பொதுத்திறைசேரியுடன் கலந்தாலோசித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ச்சியாக காணப்படுகின்ற திருப்தியற்ற நிலையை திருப்தியான நிலைமைக்கு கொண்டுவருவதற்காக தேவையான திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |